

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியம் சாலவாக்கம் கிராமத்தில் தாயுமானவர் திட்டத்தை காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு ரேசன் பொருட்களை முதியோர்களுக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கும் அவர்களது வீடுகளுக்கே சென்று வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் பொது விநியோக திட்ட பதிவாளர் ராஜேஸ்வரி, ஒன்றிய செயலாளர் டி.குமார், ஊராட்சி மன்ற தலைவர் சத்யா சக்திவேல், அறங்காவலர் குழு உறுப்பினர் வெங்கடேசன், துணைத் தலைவர் நந்தா உள்ளிட்ட ஒன்றிய நிர்வாகிகள் கூட்டுறவுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு மாநில சிறுபான்மை ஆணையத்தின் சார்பில் தலைவர் கலைஞர் அவர்களுக்கு நினைவு அஞ்சலி செலுத்தி, நலத்திட்டங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் தமிழ்நாடு மாநில சிறுபான்மை ஆணையத்தின் தலைவர் அருட்தந்தை சொ. ஜோ.அருண் , துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் , திருமதி தி. சினேகா மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### ஜப்பானிய மூளைக் காய்ச்சல்

# தடுப்பூசித் திட்டம் 7 மாவட்டங்களுக்கு விரிவாக்கம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, ஆக.14-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் நேற்று (13.08.2025) சென்னை, செனாய்நகர், பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் இருந்து 202526 ஆம் ஆண்டு மானியக் கோரி க்கை அறி விப்பின்படி, ஜப்பானிய மூளைக் காய்ச்சல் தடுப்பூசி திட்டம் 7 மாவட்டங்களுக்கு விரிவாக்கம் செய்து தொடங்கி வைத்தார்.

பிறகு அமைச்சர் செய்தி யாளர்களிடம் தெரிவித்ததா வது:



**ஜப்பானிய மூளைக் காய்ச்சல் தடுப்பூசி திட்டம்**

தமிழ்நாட்டில் மூளைக் காய்ச்சல் தடுப்பூசி திட்டம் என்பது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதல மைச்சராக இருந்தபோது 2007ஆம் ஆண்டு விருது நகர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருச்சி, திருவாரூர், மதுரை, பெரம்பலூர், அரியலூர், தஞ் சாவூர், திருவண்ணாமலை, திருவள்ளூர், புதுக்கோட்டை மற்றும் கரூர் ஆகிய 15 மாவட்டங்களில் சென்னை யில் இரண்டு மண்டலங்க ளில் என்று 2007ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு பயன் பாட்டில் இருந்து வருகிறது. இந்த வகையில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருக்கின்ற குழந்தைகளை அதிகம் பாதிக்கின்ற இந்த நோய்க்கான மூளைக் காய்ச் சல் தடுப்பூசி திட்டம் விரி வாக்கம் செய்யப்படும் என்று கடந்தாண்டு நிதிநிலை அறிக் கையில் அறிவிப்பு எண்.109ன்படி அறிவிக்கப் பட்டது. அதன்படி இன்று சென்னையில் ஏற்கனவே பயன்பாட்டில் இருக்கின்ற 2 மண்டலங்கள் தவிர்த்து மீத மிருக்கின்ற 13 மண்டலங்களி லும், புதிதாக 7 மாவட்டங் கள் என்கின்ற வகையில் செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருநெல் வேலி, தென்காசி, நாகப்பட்டினம் மற்றும் வேலூர் ஆகிய 7 மாவட்டங் களிலும் இந்த திட்டம் விரி வாக்கம் செய்யப்பட்டு இன்று தொடங்கப்பட்டுள் ளது.

தடுப்பூசி திட்டங்களை பொறுத்தவரை 1978ஆம் ஆண்டு 6 நோய்களை கட்டுப் படுத்துவதற்கு ஒரு விரிவான தடுப்பூசி திட்டம் தமிழ்நாட் டில் தொடங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 1985ஆம் ஆண்டு நாடு தழு விய தடுப்பூசி திட்டமாக அது வலுப்படுத்தப்பட்டது. நாடு தழுவிய தடுப்பூசி திட் டத்தில் தமிழ்நாட்டை பொறுத்தவரை காசநோய், தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், மஞ்சள் காமாலை, எச்.இன்புளு யன்சா, நிமோனியா மற்றும் மினிஞ்சிடிஸ், ரண ஜன்னி, போலியோ, தட்டம்மை, ரூபெல்லா, ரோட்டா வைரஸ் வயிற்றுபோக்கு, நியூ மோகோக்கல் நிமோனியா, மற்றும் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் என்று பல்வேறு வகைகளிலான இந்த நோய் பாதிப்புகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டு வருகிறது. அந்த வகையில் 12 வகை யான நோய் பாதிப்புகளை தடுப்பதற்கு இன்று 11 வகை யான தடுப்பூசிகள் தமிழ் நாட்டில் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த மூளைக்காய்ச்சல் என்று சொல்லப்படுகிற ஜப் பானிய மூளைக்காய்ச்சல் சில வகையான கியூலெக்ஸ் கொசுக்களால் பரவும் ஒரு வைரஸ் நோயாகும். இந்த நோய் மத்திய நரம்பு மண்ட லத்தை பாதிப்பு செய்து கடு மையான சிக்கல்களை, வலி பாதிப்புகளை உண்டாக்குகி றது. அது மட்டுமல்லாது மர ணத்தையும் ஏற்படுத்துகிறது. இந்த நோயினால் இறப்பு விகிதம் அதிகமாக இருக் கின்ற காரணத்தினால் இதை அனைத்து மாவட்டங்களி லும் செயல்படுத்துவதற்குரிய நடவடிக்கை முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுத லோடு செய்யப்பட்டு வருகி றது. இந்த நோய் பாதிப்பிலி ருந்து உயிர் பிழைத்தவர்கள்கூட அதிக அளவில் நரம்பியல் விளைவு களால் பாதிக்கப்படுகிறார் கள் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, இயற்கை தொற்று காரண மாக எதிர்ப்பு சக்தி இல்லாத குழந்தைகளை கண்டறிந்து அவர்கள் அதிகம் இருக்கின்ற மாவட்டங்களில் இந்த தடுப் பூசிகள் போடுவது என்பது நடைபெற்றுக் கொண்டிருக் கிறது.

ஜப்பானிய மூளைக் காய்ச் சல் தடுப்பூசி ஒருமுறை முகாம்களாக *"One Time Campaign"* அதிக ஆபத்துள்ள மாவட்டங்களில் 1 முதல் 15 வயதுள்ள குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. இன்று தொடங்கப்பட்டிருக்கும் இத்திட்டத்தை பொறுத்த வரை 1 முதல் 15 வரையி லான 27,63,152 குழந்தை களுக்கு இந்த மூளைக்கா ய்ச் சல் தடுப்பூசி ஒரு டோஸ் போட நடைவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது. மாவட்ட சுகாதார அலுவலர்கள், மாவட்ட தாய் சேய் நல அலு வலர்கள் ஆகியோரின் மேற் பார்வையில் கிராம, நகர சுகாதார செவிலியர்கள் மற் றும் தேவைப்படுகின்ற இட ங்களில் இடைநிலை சுகா தார செவிலியர்கள் முதலா னோர் அவர்களால் இந்த தடுப்பூசி திட்டம் இன்று தொடங்கப்பட்டு செயல் பாட்டுக்கு வந்துள்ளது.

1 முதல் 15 வயது வரையி லான மொத்தம் 27,63,152 குழந்தைகளுக்கு ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பூசி ஒரு டோஸ் வழங்க நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த முகாம் மூன்று அணுகு முறைகளில் செயல்படுத் தப்படும்:

**பள்ளி தடுப்பூசி முகாம்:**

515 வயதுடைய குழந்தை களுக்கு அனைத்து அரசு மற் றும் அரசு உதவி பெறும் பள் ளிகளில் ஆகஸ்ட் 13, 2025 முதல் செப்டம்பர் 12, 2025 வரை திங்கள், வியாழன் மற் றும் வெள்ளிக்கிழமைகளில் அதிகபட்சமாக 12 நாட்க ளுக்கு தடுப்பூசி முகாம் நடை பெறும். அதைத் தொடர்ந்து விடுபட்ட குழந்தைகளுக்கு ஒரு வாரம் தடுப்பூசி போடப் படும்.

**அங்கன்வாடி தடுப்பூசி முகாம்:**

15 வயதுக்குட்பட்ட குழந் தைகள் மற்றும் பள்ளியிலி ருந்து இடைநிற்றலான குழந் தைகளுக்கும் அனைத்து அங்கன்வாடி மையங்களி லும் தடுப்பூசி முகாம் செப் டம்பர் 13, 2025 முதல் அக் டோபர் 12, 2025 வரை திங்கள், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் அதிக பட்சமாக 12 நாட்களுக்கு நடைபெறும். அதைத் தொடர்ந்து விடுபட்ட குழந் தைகளுக்கு ஒரு வாரம் தடுப் பூசி போடப்படும்.

**ஆதரவற்ற குழந்தைகள் காப்ப கம் மற்றும் சிறுவர் சீர்திருத்த பள் ளிகளில் தடுப்பூசி முகாம்:**

அனைத்து ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம் மற் றும் சிறுவர் சீர்திருத்த பள்ளி களில் 115 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் அக்டோபர் 13, 2025 முதல் நவம்பர் 12, 2025 வரை திங் கள், வியாழன் மற்றும் வெள் ளிக்கிழமைகளில் அதிகபட்ச மாக 12 நாட்களுக்கு முகாம் நடைபெறும். அதைத் தொடர்ந்து விடுபட்ட குழந் தைகளுக்கு ஒரு வாரம் தடுப் பூசி போடப்படும்.

எனவே மூளைக்காய்ச்சல் நோய் தீவிரத்தை கருத்தில் கொண்டு அனைத்து பெற் றோர்களும், பாதுகாவலரும், பள்ளி அதிகாரிகளும், சமுக ஆர்வலர்களும் கள சுகாதா ரப்பணியாளர்களுக்கு முழு ஒத்துழைப்பு தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கின் றோம். முகாமில் தகுதியுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் இந்த தடுப்பூசி என்பது இல வசமாக போடப்படுகிறது. இந்த தடுப்பூசி 1 முதல் 15 வயது உள்ள குழந்தைகளுக்கு ஏற்கேனவே சொன்னது போல 20 இலட்சம் மேற் பட்ட குழந்தைகளுக்கு இத் தடுப்பூசி அனைவருக்கும் போடப்பட்டுள்ளதா என் பதை உறுதிப்படுத்தப்பட்டு 27,63,152 குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அனைத்து குழந்தைகளுக்கும் தடுப்பூசி போடுவதற்கு சம் மந்தபட்டவர்கள் உறுது ணையாக இருக்க வேண்டும், ஒத்துழைப்பை நல்க வேண் டும் என்பதை கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியா ளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செய லாளர் முனைவர் ப.செந்தில் குமார், மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர். கௌசிக், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து துறை இயக்குநர் மரு. சோமசுந்தரம், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் மரு.சித்ரா, நிலைக் குழுத் தலைவர் (சுகா தாரம்) மரு.கோ.சாந்தகு மாரி, இணை இயக்குநர் மரு. வினய், மாநகர நல அலுவலர் மரு.ஜெகதீசன், மண்டலக் குழுத் தலைவர் கூ.பி. ஜெயின், மாமன்ற உறுப்பி னர் மெட்டில்டா கோவிந்த ராஜ் மற்றும் மருத்துவர்கள், ஆசிரியர்கள், பள்ளி மாணவி கள் பலர் கலந்து கொண்ட னர்.





கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி ஆலோசனைப்படி இடையாள்பாளையம் பகுதி அறிஞர் அண்ணா நகரில் உள்ள நியாய விலைக் கடையில் 'முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை யொட்டி முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு ரேசன் பொருட்களை 35–வது வட்ட அவைத் தலைவர் சோ.துரைபாண்டியன் ஏற்பாட்டில் பகுதிப் பொறுப்பாளர் மதியழகன் துவக்கி வைக்க, மாமன்ற உறுப்பினர் சத்பத், வட்டச் செயலாளர் குமரேசன் ஆகியோர் வழங்கினர். உடன் கழக நிர்வாகிகள் நடராஜன், கண்ணகி, சோனைசாமி, சக்கரபாண்டியன், கிரிஜீதீஸ், சந்திரலிங்கம், பாலன், மோகன்ராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் செங்குன்றம் சைதை கூட்டுறவு வர்த்தக சங்க துறை சார்பில் சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 30 அ வட்டக் கழகத்தின் சார்பில் முதியோர் மாற்றுத் திறனாளிகளுக்கு நியாய விலை கடை உணவு பொருட்களை வட்ட செயலாளர், கல்வி மேலாண்மை குழு உறுப்பினர் டி.சுந்தரம் அவர்களின் இல்லத்திற்கு சென்று ரேசன் பொருட்களை வழங்கி தொடங்கி வைத்தார். உடன் அபிப்ரஹ்மான், எஸ்.என்.ராஜ், டி.செல்லமுத்து, மெக்கானிக் குமார், உமாநாத், சந்தானம், ஆர்.நாராயணன், எம்.கோபால் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### வட்ட அவைத் தலைவர் சோ.துரைபாண்டியன் ஏற்பாடு! பகுதிப் பொறுப்பாளர் மதியழகன் துவக்கி வைத்தார்!

# கோவை - இடையார்பாளையம் - அறிஞர் அண்ணா நகரில் 'முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்'!

## சம்பத் எம்.சி. — வட்டச் செயலாளர் குமரேசன் ரேசன் பொருட்கள் வழங்கினார்!

கோவை, ஆக. 14-

கோவை இடையார்பாளை யம் பகுதி அறிஞர் அண்ணா நகரில் உள்ள ரேசன் கடையில் அவைத் தலைவர் சோ.துரை பாண்டியன் ஏற்பாட்டில், பகுதி பொறுப்பாளர் மதியழ கன் துவக்கி வைக்க மாமன்ற உறுப்பினர் சம்பத் வட்ட செயலாளர் குமரேசன் முதி யோர் மற்றும் மாற்றுத் திறனா ளிகளுக்கு ரேசன் பொருட் களை வழங்கினார்கள்.

கழகத் தலைவர், தமிழ்நாட் டின் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர் கள் அறிவித்துள்ள தாயுமான வர் திட்டமானது அறிஞர் அண்ணா நகரில் உள்ள நியாய விலை கடையில் வடக்கு மாவட்ட செயலாளர் தொ.அ. ரவி ஆலோசனையின் பேரில், அறிஞர் அண்ணா நகர் நலச் சங்க தலைவரும் அவை தலைவ ருமான சோ.துரைப்பாண்டி யன் ஏற்பாட்டில், இடையர்பா ளையம் பகுதிக் கழகப் பொறுப் பாளர் மதியழகன் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிக ளுக்கு ரேசன் பொருட்களை வழங்கி தொடங்கி வைத்தார்.

இதில் முதன் முதலாக நவநீ தம், நரசிம்மன் குடும்பத் தார் ரேசன் பொருட்களை பெற் றுக் கொண்டனர்.

35 வது மாமன்ற உறுப்பி னர் நா.சம்பத், வட்டக் கழகச் செயலாளர் ஆர்.குமரேசன், ஆகியோரும் ரேசன் பொருட் களை முதியோர் மாற்றுத்திற னாளிகளுக்கு வழங்கினார்கள். வீடு தேடி சென்று ரேசன் பொருட்களை வழங்கும் உன் னத திட்டமானது துவக்கப் பட்டு அறிஞர் அண்ணா நகர், அன்பு நகர், ஆட்டோ நகர், லட்சுமி நகர், மாசாணி அம் மன் நகர் கூலி நெசவாளர் காலனி ஆகிய பகுதிகளில் உள்ள பயனாளிகளுக்கு நேரில் சென்று ரேஷன் கடை வின்ப னை யாளர், மாணிக்கராஜ் மற் றும் ஊழியர்கள் துணையுடன் வழங்கப்பட்டது. மாற்றுத்திற னாளிகள் மற்றும் முதியோ ர்கள் இத் திட்டத்தினால் பயன் அடைந்ததால், அவர்கள் குடும்பத் தார் நமது கழகத் தலைவரை போற்றி புகழ்ந்த னர்.

இந்நிகழ்வில் கீழ்க்கண்ட கழக மூத்த முன்னோடி களும் நிர்வாகிகளும், கலந்து கொண்டு பயனாளிகளை அடையாளம் கண்டு ரேசன் பொருட்கள் வழங்குவதில் பெரும்பங்கு ஆற்றினர். மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் நடராஜன், பகுதி கழக துணைச் செயலா ளர் கண்ணகி, BLA2 க்கள் சோனைசாமி, சங்கரபாண்டி யன், சிராஜுதீன், லயன் சந்தி ரலிங்கம், சலூன் பாலன், இ சர்வீஸ் மோகன்ராஜ், பாட்ஷா பாய், ராஜேந்திரன், சரவணன் ஆகியோரும் இதில் கலந்து கொண்டு தங்களது பங் களிப்பை திறம்பட செய்தனர். பொதுமக்கள் தாமாகவே முன் வந்து மகிழ்ச்சி யுடன் இத்திட் டத்தை வரவேற்றனர்.

### தமிழ்நாடு முதலமைச்சர் – கழகத் தலைவர் அறிவிப்பின்படி

# திருவள்ளூர் மேற்கு மாவட்டம் முழுவதும் கிளைக் கழகக் கூட்டங்கள்!

மாவட்டக் கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



| வ. எ. | தேதி | ஒன்றியம்/நகரம்/பேரூர் | ஏற்பாடு |
|---|---|---|---|
| 1 | 20.08.2025 | திருத்தணி கிழக்கு | திரு.பா.ஆர்த்தி ரவி |
| 2 | 21.08.2025 | திருத்தணி மேற்கு | திரு.என்.கிருஷ்ணன் |
| 3 | 22.08.2025 | திருத்தணி வடக்கு | திரு.A.L.விஜய குமார் |
| 4 | 23.08.2025 | திருத்தணி தெற்கு | திரு.கே.இராஜேந்திரன் |
| 5 | 24.08.2025 | ஆர்.கே,.பேட்டை கிழக்கு | திரு.பா.சம்பத் |
| 6 | 25.08.2025 | ஆர்.கே.பேட்டை மேற்கு | திரு.மா.ரகு |
| 7 | 26.08.2025 | ஆர்.கே.பேட்டை வடக்கு | திரு.C.N.சண்முகம் |
| 8 | 27.08.2025 | ஆர்.கே.பேட்டை தெற்கு | திரு.பெ.பழனி |
| 9 | 28.08.2025 | பள்ளிப்பட்டு வடக்கு | திரு.C.J.சீனிவாசன் |
| 10 | 29.08.2025 | பள்ளிப்பட்டு தெற்கு | திரு.G.ரவீந்திரா |
| 11 | 30.08.2025 | பள்ளிப்பட்டு மத்தியம் | திரு.B.D.சந்திரன் |
| 12 | 31.08.2025 | பள்ளிப்பட்டு பேரூர் | திரு.C.J.செந்தில் குமார் |
| 13 | 01.09.2025 | பொதட்டூர்பேட்டை பேரூர் | திரு.T.R.K.பாபு |
| 14 | 02.09.2025 | திருத்தணி நகரம் | திரு.வி.வினோத் குமார் |
| 15 | 03.09.2025 | திருவள்ளூர் நகரம் | திரு.சி.சு.ரவிச்சந்திரன் |
| 16 | 04.09.2025 | பூண்டி மேற்கு | திரு.கிருஸ்டி (எ) அன்பரசு |
| 17 | 05.09.2025 | கடம்பத்தூர் கிழக்கு | திரு.க.அரிகிருஷ்ணன் |
| 18 | 06.09.2025 | கடம்பத்தூர் மேற்கு | திரு.மோ.ரமேஷ் |
| 19 | 08.09.2025 | திருவாலங்காடு கிழக்கு | திரு.S.மகாலிங்கம் |
| 20 | 09.09.2025 | திருவாலங்காடு மேற்கு | திரு.கூளூர் எம்.இராஜேந்திரன் |

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் கழக கொள்கை பரப்புச் செயலாளரும் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர்.எஸ்.ஜெகத்ரட்சகன், தலைமை செயற்குழு உறுப்பினரும், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன், கழக விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன், கழக நெசவாளர் அணி துணைத்தலைவர் ஒ.ஏ.நாகலிங்கம், திருத்தணி தொகுதி பார்வையாளர் சண்முகநாதன், திருவள்ளூர் தொகுதி பார்வையாளர் மாஸ்டர் பெ.சேகர், மாநில தொண்டர் அணி பயிற்சியாளர் மாஸ்டர்.இ.குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர்.வி.சி.ஆர்.குமரன், சி.ஜெயபாரதி, பா.உதயமலர் பாண்டியன், எம்.மிதுன் சக்கரவர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி.கிஷோர், மு.சுப்பிரமணியம், பி.இராஜேஸ்வரி இரவீந்திரநாத், ஆகியோர் கலந்துக் கொள்கின்றனர். மேற்கண்ட கூட்டங்களில் திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட ஒன்றிய நகர பேரூர் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளை கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் ஆங்காங்கே தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: 1. கிளை கழக கூட்டங்கள் முறையாக நடத்திடவும் தீர்மானங்களை நிறைவேற்றிடவும் கேட்டுக் கொள்கிறேன்.

2. இக்கூட்டத்தின் நடவடிக்கைகளை மினிட் புத்தகத்தில் பதிவு செய்திட அதற்கான ஏற்பாடுகளை ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் செய்திடவும் கேட்டுக் கொள்கிறேன்.

3. முடிவுபெற்ற கிளை கழக கூட்டங்களின் மினிட் புத்தகங்களை கூட்டம் முழுந்த அன்றே மாவட்ட கழகத்திடம் ஒப்படைத்திட கேட்டுக்கொள்கிறேன்.

**திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ**

செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.



முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டுக்கு உட்பட்ட புதிய பூபதி நகரில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை வயது முதிர்ந்த பயனாளிகளின் இல்லத்திற்கு சென்று, தி.மு.க அயலக அணி மாநிலத் துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி ரேசன் பொருள்களை வழங்கினார்.